# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 257/மா/**2023**

**நாள்: 20.02.2025**

திரு. A. மனோகரன்
திண்டுக்கல் – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
திண்டுக்கல் மாநகராட்சி – எதிர்மனுதாரர்

திண்டுக்கல், புதூர், ரவுண்டு ரோடு, எண் 3/120 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. மனோகரன் என்பவரின் 09.08.2023 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2023 அன்று பெறப்பட்டு 257/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

திண்டுக்கல், புதூர், ரவுண்டு ரோடு, எண் 3/120 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. மனோகரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> "நான் திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவுரு எழுத்தராகப் பணிபுரிந்து கடந்த 31.12.2016–ல் ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வருகிறேன். தமிழக அரசால் 25.10.2017–ல் 7வது ஊதியக் குழு பரிந்துரை செய்தது. 7வது ஊதியக் குழு பரிந்துரையின் கீழ் திருத்தியமைக்கப்பட்ட 43 மாத திருத்திய ஓய்வூதியத் தொகை ரூ.54,015/– மற்றும் திருத்திய பணிக்கொடை தொகை ரூ.67,681/– ஆகியவை ஏழு வருடங்களாக வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இந்த தொகையை இரண்டு தவணைகளாக வழங்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 11.09.2023 நாளிட்ட அறிவிக்கை மூலம் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் தனது 26.09.2023 மற்றும் 12.02.2025 நாளிட்ட அறிக்கைகளில்:

"திண்டுக்கல் மாநகராட்சியில் பணிபுரிந்த திரு. எ. மனோகரன் (பதிவறை எழுத்தர்) 31.12.2016–ல் ஓய்வு பெற்றார். இவருக்கு வழங்க வேண்டிய ஓய்வூதியப் பயன்கள் அனைத்தும் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. 7வது ஊதியக்குழு பரிந்துரைகளின்படி நிலுவைத் தொகை ரூ.2,21,696/–க்கு EJV 078/22-23/RF/0133, நாள் 26.05.2022 இல் பட்டியல் தயார் செய்யப்பட்டது. முதல் தவணையாக ரூ.1,00,000/– 31.3.2023 இல் வழங்கப்பட்டது. இரண்டாவது தவணையாக ரூ.54,015/– யூனியன் வங்கி காசோலை எண்.008354, நாள் 21.8.2023 தனியருக்கு வழங்கப்பட்டு விட்டது.

மேற்படி ஓய்வூதியதாரர்களுக்கு முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு கடந்த ஏப்ரல் 2023 மாதம் முதல் இரண்டு நபர்களுக்கு தலா ரூ.1,00,000/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. இதுநாள் வரை 10 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 13 நபர்களுக்கு இதுவரை எந்த ஒரு தொகையும் வழங்கப்படவில்லை. ஆனால், திரு. எ. மனோகரன், ஓ/பெ பதிவறை எழுத்தருக்கு இதுவரை இருமுறை மேற்கண்டவாறு தொகை வழங்கப்பட்டும், மீதமுள்ள தொகையினை வழங்கிட தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் பதிவு தபால் வழியாக விண்ணப்பித்துள்ளார். கடந்த 15.9.2023 இல் 23 நபர்களின் முன்னுரிமைப் பட்டியலும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலுவைத் தொகையினை முன்னுரிமைப் பட்டியலின் அடிப்படையிலும், மாநகராட்சியின் நிதி நிலைக்கேற்பவும் வழங்கப்படும் என்ற விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என தெரிவித்துள்ளார்."

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 13.02.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 13.02.2025 அன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.

6. மனுதாரர் 05.02.2025 நாளிட்ட தனது கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

"நான் திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவுரு எழுத்தராகப் பணிபுரிந்து கடந்த 31.12.2016–ல் ஓய்வு பெற்றேன். தமிழக அரசால் 25.10.2017, 7–வது ஊதியக் குழு பரிந்துரை செய்தது. 7வது ஊதியக் குழுவின் திருத்திய ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைத் தொகை 16.5.2024 அன்று திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்கள் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த 13.02.2025 விசாரணையிலிருந்து எனக்கு விலக்களிக்குமாறு தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7. திண்டுக்கல் மாநகராட்சி உதவியாளர் 13.02.2025 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவுரு எழுத்தர் ஆக பணிபுரிந்த திரு.எ.மனோகரன், 31.12.2016ல் ஓய்வு பெற்றார். இவருக்கு வழங்க வேண்டிய ஓய்வூதியப் பயன்கள் அனைத்தும் ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. 7வது ஊதியக்குழு பரிந்துரைகளின்படி நிலுவைத் தொகை ரூ.2,21,696/–க்கு EJV 078/2022-2023/RF/0133. Dated 31.03.2023ல் பட்டியல் தயார் செய்யப்பட்டது. முதல்

தவணையாக ரூ.1,00,000/– 31.03.2023–ல் வழங்கப்பட்டது. இரண்டாவது தவணையாக ரூ.54,015/– யூனியன் வங்கி காசோலை எண்.008354, நாள் 21.08.2023ல் அனுப்பப்பட்டது. இவரைப் போல் 7வது ஊதியக் குழு நிலுவைத் தொகை வழங்க வேண்டிய ஓய்வூதியதாரர்கள் 23 பேர் நிலுவையில் உள்ளனர்.

மேற்படி மனுதாரர் திரு.எ.மனோகரன் அவர்களுக்கு ஓய்வூதிய பயன்கள் நிலுவை இல்லாமல் தற்போது வழங்கப்பட்டு விட்டது என்று இம்முறை மன்ற நடுவத்திற்கு தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு 05.02.2025 நாளிட்டு திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு நகலிட்ட மனுவில் மேற்படி ஓய்வூதியத் தொகை முழுவதுமாக வழங்கப்பட்டுள்ளதை உறுதி செய்துள்ளார்." என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது 05.02.2025 நாளிட்ட கடிதம் மற்றும் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் அறிக்கைகள் மற்றும் உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர் திண்டுக்கல் மாநகராட்சியில் பதிவுரு எழுத்தராக பணிபுரிந்து 31.12.2016ல் ஓய்வு பெற்றார் எனவும், 7வது ஊதியக் குழு பரிந்துரையின் கீழ் திருத்தியமைப்பட்ட ஓய்வூதியத் தொகை ரூ.54,015/– வழங்காமல் நிலுவையில் இருந்ததாகவும், தற்போது 7வது ஊதியக் குழு திருத்திய ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைத் தொகை 16.05.2024 அன்று திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் மூலம் வழங்கப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாநகராட்சியில் மனுதாரர் பதிவுரு எழுத்தராக பணிபுரிந்து 31.12.2016–ல் ஓய்வு பெற்றார் எனவும், அன்னாருக்கு 7வது ஊதியக் குழு பரிந்துரையின்படி நிலுவைத் தொகை வழங்கப்பட்டு விட்டதாகவும், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நிலையில், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையை ஏற்றும், மனுதாரர் தனக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை திண்டுக்கல் மாநகராட்சி ஆணையரால் 16.05.2024 அன்று வழங்கப்பட்டு விட்டது என்று தெரிவித்த நிலையில், மனுதாரரின் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறை மன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு பிப்ரவரி 20-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.A. மனோகரன்,
3/120, ரவுண்டு ரோடுபுதூர்,
திண்டுக்கல்–5.

2) ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி,
திண்டுக்கல்–624 001.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

4) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).